ஞானகுருவின் படைப்புக்கள்

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,126 சித்திரை மாதம்

# "தமிழர்கள் மறுசிந்தனே!"

## இரண்டாம் பாகம் (நிறைவுப் பகுதி)




இந்துமதத்தின் தலைமை ஆச்சாறிய குருபீடம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி,
அந்தணர் அண்ணல், ஞாறுச்சாரியார்,
ஞானகுரு சித்தர் அரசயோகிக் கருவூறுர்.



இந்து இலக்கியக் கழக வெளியீடு

**43,73,126ஆம் ஆண்டின் சித்திரை மாத வெளியீடு.**

<u>தலைப்பு:</u> **"தமிழர்கள் மறுசிந்தனை - இரண்டாம் பாகம் (இறுதிப் பகுதி)"**

# <u>உள்ளுறை</u>

1. **"தமிழர்கள் மறுசிந்தனை"** - இந்துவேதம், இந்துமதம் பிழைக்க, தழைக்க, உழைக்க அழைக்கிறோம் என்று தமிழர்களுக்காக குருதேவர் எழுதிய நெடிய அஞ்சல் வடிவக் கட்டுரையின் இரண்டாம் பாகத்தின் இறுதிப் பகுதி. இத்துடன் இந்தக் கட்டுரை நிறைவு பெறுகிறது.
2. **"தமிழாசிரியர்களின் நிலை"** - இன்றைய தமிழகத்தில் தமிழைக் கற்கின்ற மாணவர்களும், அவர்களுக்குத் தமிழைக் கற்பிக்கின்ற ஆசிரியர்களும் எத்தகைய மனநிலையில் உள்ளனர் என்பதைப் படம்பிடித்துக் காட்டும் கட்டுரை. 1993இல் குருதேவர் கருத்துப் பரிமாற்றமாக அருளிய கருத்துக்கள்.
3. **"நாட்டில் புதுமை வர வேண்டும்"** - 22-06-1984இல் குருதேவர் அவர்கள் அருளிய உரையிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு பகுதி.

---

**<u>அருளியவர்:</u>**

**<u>ஞானச்சாரியார்.</u>**

**<u>இந்து இலக்கியக் கழக வெளியீடு.</u>**

**<u>பதினெண்சித்தர் மடம் அறக்கட்டளை.</u>**

**<u>G.N.T. சாலை, காரனோடை, சென்னை-600067.</u>**

# தமிழர்கள் மறுசிந்தனை

## இந்து வேதம்! இந்து மதம்!!
## பிழைக்க! தழைக்க!! உழைக்க!!!

## அழைக்கிறோம்! அழைக்கிறோம்!
## அழைக்கிறோம்!

## வாரீர்! வாரீர்!! வாரீர்!!!

**இந்துமதத் தலைமை ஆச்சாரிய மூலக் குருபீடம், இந்துமதத் தந்தை, இந்துவேத நாயகம், ஞானாச்சாரியார், பதினெண்சித்தர் மடாதிபதி, பீடாதிபதி, குருமகாசன்னிதானம்,**

## ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்

**அருளும்**

## செயல்விளக்கத் திருவோலை
## (இரண்டாம் பாகம்) தொடர்ச்சி

**[இறுதிப் பகுதி]**

... தமிழர்கள் தங்களுக்காகப் பதினெண்சித்தர்கள் தமிழ்மொழியில் வழங்கியுள்ள இந்துமதம் வேறு, பிருமணர்களுடைய சமசுக்கிருத மொழியிலுள்ள ஹிந்துமதம் வேறு என்ற பேருண்மையைக் கட்டாயமாகப் புரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகவே; **'தமிழர்களுடைய இந்துமதமும் பிருமணர்களுடைய ஹிந்துமதமும்' என்ற கருத்து வேறுபாட்டு அட்டவணை** இங்கு தயாரித்து கீழே தருகிறோம்.

| | தமிழரின் இந்துமதம் | பிருமணரின் ஹிந்துமதம் |
|---|---|---|
| 1 | கடலுள் மறைந்த குமரிக் கண்டம் எனும் இளமுறியாக் கண்டத்தில் பிறந்தது. | பிறமண்ணினரான பிருமணர்கள் எனும் வடஆரியர் இன்றுள்ள வட இந்தியாவிலுள்ள சிந்து, கங்கைச் சமவெளிகளில் குடியேறிய பிறகு தமிழருடைய இந்துமதத்தின் அடிப்படையில் உருவாக்கியது. |
| | நான்கு யுகங்களாக வாழ்ந்து கொண்டிருப்பது. | நான்காவது உகமான கலியுகம் ஆரம்பித்து 2000 ஆண்டுகள் கழித்தே பிறந்தது. |
| | 43,73,091 ஆண்டுக் காலப் பழமை உடையது. | 3000 ஆண்டுக் காலப் பழமை உடையது. |
| | எல்லாரும் வேதங்களை ஓதலாம் என்று கூறுவது. | பிருமணர்கள் மட்டுமே வேதங்களை ஓதலாம் என்று கூறுவது. |
| 2 | தமிழ்மொழியையே அருளாட்சி மொழியாக உடையது. | சமசுக்கிருத மொழியையே அருளாட்சி மொழியாக உடையது. |
| 3 | நான்மறை, நான்முறை, நானெறி, நான்வேதம் என்று நூற்றெட்டுப் பூசைமொழி நூல்களை உடையது. | ரிக், யஜுர், ஸாமம், அதர்வணம் எனும் நான்கு வேதங்களைக் கொண்ட பூசைமொழி நூலை உடையது. |
| 4 | அருள் வந்து ஆடி, அருட்செயல்களை நிகழ்த்தும் மரபை உடையது. | அருள் வருவதையே விரும்பாத மரபுடையது. |
| 5 | இல்லற வாழ்வே நல்லற வாழ்வு என்ற கொள்கையை உடையது. | துறவற வாழ்வே நல்லற வாழ்வு என்ற கொள்கையுடையது. |
| 6 | சாதிமத வேறுபாடோ, உயர்வு தாழ்வோ இல்லாத சமத்துவ மெய்ஞ்ஞான மதம். | சாதிமத வேறுபாட்டு வருணாசிரம தர்மத்தையும், சாதிமத உயர்வு தாழ்வு, தீண்டாமைக் கொள்கைகளையும் உடைய சனாதன மதம். |
| 7 | ஒரே ஒருவகைப்பட்ட காதல் திருமண விதிமுறையையே உடையது. | எட்டு வகைப்பட்ட திருமண விதிமுறைகளை உடையது. |

| | தமிழரின் இந்துமதம் | பிருமணரின் ஹிந்துமதம் |
|---|---|---|
| 8 | மண்ணுலக விண்ணுலக கடவுள்களைக் கூறுவது. | விண்ணுலகக் கடவுள்களை மட்டும் கூறுவது. |
| 9 | அருவ, உருவ, அருவுருவ, உருவஅருவ வழிபாடுகள் நான்கையும் கூறுவது. | தானே பிரம்மம் எனும் மாயாவாதத்தைக் கூறும் அருவ வழிபாட்டைக் கூறுவது. |
| 10 | இலிங்கம், சத்திலிங்கம், சிவலிங்கம், அம்மன், நந்தி எனும் ஐவரையும் மூலமாக, முதலாகக் கொண்டு வழிபடுவது. | இலிங்கத்தை மட்டும் வழிபடுவது. |
| 11 | திருநீறு, குங்குமம், சந்தனம், சாந்து, திருமண், மை, மஞ்சள் முதலியவற்றை அருளூறு பூசனைப் பொருட்களாக நெற்றியில் அணிவது. | திருநீறு மட்டுமே அணிவது. |
| 12 | இப்பிறப்பு, முற்பிறப்பு, மறுபிறப்பு எனும் முப்பிறப்புக் கொள்கைகளை உடையது. | ஒரே பிறப்புக் கொள்கையுடையது. |
| 13 | பெண்ணை அருளுலக வாழ்வுக்குரியவள் என்று ஏற்கிறது. | பெண்ணை அருளுலக வாழ்வுக்குக் கூடாது என்று மறுக்கிறது. |
| 14 | அறவி, உறவி, துறவி, மறவி எனும் நான்கு வகையான வாழ்வியல்களும் அருளுலகத்திற்கு ஏற்றவையே என்ற கொள்கையை உடையது. | துறவி வாழ்க்கை ஒன்றுதான் அருளுலக வாழ்விற்கு ஏற்றது என்று கூறுவது. |
| 15 | அவரவர் தாய்மொழியில் அவரவருடைய முன்னோர்களை வழிபடுவதே அருளுலக வாழ்க்கையாகும் என்ற கொள்கையை உடையது. | எவருக்கும் தொடர்பு இல்லாத புராண இதிகாசக் கடவுள்களை சமசுக்கிருத மொழியில் மட்டுமே வழிபடுவதுதான் அருளுலக வாழ்க்கை என்ற கொள்கையை உடையது. |

| | தமிழரின் இந்துமதம் | பிரூமணரின் ஹிந்துமதம் |
|---|---|---|
| 16 | எவர் வேண்டுமானாலும் பூசைகளைச் செய்யவும், மதத் தலைவராக வாழவும் முடியும் என்று கூறுவது. | பிரூமணர்கள் மட்டும் பூசைகளைச் செய்யவும், மதத் தலைவர்களாக வாழவும் முடியும் என்று கூறுவது. |
| 17 | அருளை அநுபவப் பொருளாக பிறருக்கு வழங்கும் அருளாளிகளையும், மருளாளிகளையும் உடையது. | அருளைப் பிறருக்கு வழங்கினால் தங்களுக்கு இழப்பு ஏற்படும் என்று தயங்குபவர்களை உடையது. |
| 18 | 48 வகைக் கருவறைகள், 48வகை வெட்டவெளிக் கருவறைகள், 48வகை வழிபாட்டு நிலையக் கருவறைகள் ஆகிய 144 வகைப்பட்ட கருவறைகளையும் ஏற்றுப் போற்றிப் பேணிப் பாதுகாத்துப் பயனடைவது. | 48 வகை வழிபாட்டு நிலையக் கருவறைகளை மட்டுமே ஏற்றுப் போற்றிப் பேணிப் பாதுகாத்துப் பயனடைவது. |
| 19 | இம்மண்ணுலகில் தோன்றிடும் மதங்கள் அனைத்தையும் தங்களுக்குத் துணையுள்ளவைகளாக ஏற்றுப் போற்றி நட்போடு வாழுவது. | இம்மண்ணுலகில் தோன்றிடும் மதங்கள் அனைத்தையும் தங்களுக்கு எதிரியாக, போட்டியாக நினைத்துப் பகையோடு சண்டையிட்டுக் கொண்டேயிருப்பது. |
| 20 | எத்தகையவரும் பயிற்சி முயற்சிகளால் அருளைப் பெற்று நலமடையலாம் என்று கூறுவது. | பெரிய பெரிய செல்வர்களும், மன்னர்களும் மட்டுமே யாகங்களைச் செய்து அருளைப் பெற்று நலமடையலாம் என்று கூறுவது. |
| 21 | 'மனிதன்தான் கடவுளாகிறான்' என்ற தத்துவத்தையும், அதற்குரிய செயல் சித்தாந்தத்தையும் வழங்குவது. | கடவுள் எப்பொழுதாவதுதான் மனித வடிவில் தோன்றுகிறார் என்ற புராண இதிகாசக் கதைகளை கூறுவது. |
| 22 | கடவுள் இம்மண்ணுலக வாழ்வியலின் எல்லாவகையான உறவுமுறைகளிலும் அன்பு செலுத்திக் காப்பவராகக் கருதுகிறது. | கடவுளை விண்ணுலக வாழ்வின் தலைவராக, முதலாளியாக, சர்வாதிகாரியாகக் கருதுவது. |

| | தமிழரின் இந்துமதம் | பிருமணரின் ஹிந்துமதம் |
|---|---|---|
| 23 | பொதுவாகக் கோயில்களில் ஒன்பது கோள்களையும் ஒரே நேர்கோட்டில் ஒரே திசையில் பார்த்திருக்கும்படி நிலைநிறுத்தி மக்கள் அருள்நலம் பெறச் செய்திட உதவியிருப்பது. | ஒன்பது கோள்களையும் வெவ்வேறு திசையில் பார்த்திருக்கும்படி நிலைநிறுத்தி யாருமே அருள்நலம் பெற முடியாமல் போகச் செய்திருப்பது. |
| 24 | மாரியம்மன், காளியம்மன், அங்காளம்மன், பகவதியம்மன், செல்லியம்மன், ... முதலிய 243 சத்திகளை ஏற்று வழிபடுவது. | மாரியம்மன், காளியம்மன், அங்காளம்மன், பகவதியம்மன், செல்லியம்மன், ... முதலிய 243 சத்திகளை துஷ்ட தெய்வங்கள் என்று ஒதுக்கி வைப்பது. |
| 25 | எல்லா நல்ல செயல்களையும் ஆரம்பிப்பதற்குரிய பீடுடைய மாதமாக மார்கழியைக் கருதுவது. | எந்த நல்லக் காரியத்தையும் ஆரம்பிக்கக் கூடாத பீடை மாதமாக மார்கழியைக் கருதுவது. |
| 26 | புத்தாண்டு பிறக்கின்ற முதல்மாதம் தை மாதம் என்ற கணக்கினை உடையது. | புத்தாண்டு பிறப்பது சித்திரை மாதம் என்ற கணக்கினை உடையது. |
| 27 | வாரத்தின் நாட்கள் வியாழக் கிழமையில் ஆரம்பித்து வெள்ளிக் கிழமையில் முடிவது. | வாரத்தின் நாட்கள் ஞாயிற்றுக் கிழமையில் ஆரம்பித்து சனிக்கிழமையில் முடிவது. |
| 28 | ஆதிசிவனார் காலத்திலிருந்து இன்று 1991வரை இந்துமதம் தோன்றிய ஆண்டுக் கணக்கு நான்கு யுகங்களாகச் சேர்த்து மொத்தம் 43,73,092 ஆண்டு என்ற நெடிய தொடர் காலக்கணக்கீட்டு முறையிருக்கிறது. | 60 ஆண்டுகளுக்கு ஒருமுறை காலக் கணக்கீட்டை முடித்துக் கொள்ளுகின்ற முறையினை மட்டுமே உடையது. |
| 29 | இராமாயண நாயகனான இராமதேவனை கங்கைக்கரைத் தமிழன் என்றும், மகாபாரத நாயகனான கண்ணதேவனை யமுனைக்கரைத் தமிழன் என்றும் மெய்ப்பிப்பது. | இராமாயண நாயகனான இராமதேவனையும், மகாபாரத நாயகனான கண்ணதேவனையும் வடஆரியர்கள் என்று கூறுவது. |

இப்படியாக பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள் மதுரையின் பேரழிவுக்குப் பிறகு சுமார் 32 ஆண்டுக் காலம் நாட்டின் நிலைமைகள் அனைத்தையும் உற்றுக் கவனித்து; நிலையாக இந்துவேத வளவளர்ச்சிக்காகவும், இந்துமத ஆட்சிமீட்சிக்காகவும் செய்திட்ட செயல்திட்டங்களில் ஒன்றே அவர் எழுதிக் குவித்திட்டவைகள். இவையல்லாமல் அவர் வகுத்திட்ட, செயலாக்கிட்ட செயல்திட்டங்கள் விரல்விட்டு எண்ணிடக் கூடியவைகளாக இருக்கின்றன. எனவே, விரிவஞ்சி இங்கே அவருடைய குருபாரம்பரிய வாசகங்களில் இருந்தும், குருவாக்கு, குருவாக்கியம், குருவாசகம் என்ற முப்பெரும் அறிவுக் கொடைகளிலிருந்தும் சில வரிகளை இங்கு எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

(1) "... எம்மால் இன்றுள்ள இந்துமத இந்தியாவின் இந்துமதத்தின் ஏட்டுலகையும், நாட்டு நடப்பையும் எள்முனையளவு கூடப் புரிந்து கொள்ள முடியவில்லை. இப்படியொரு நிலைமை பதினெண்சித்தர்களுடைய அண்டபேரண்டமாளும் இந்துவேதத்திற்கும், இந்துவேத மதமான இந்துமதத்திற்கும் எப்பொழுது ஏற்பட்டது? எப்படி ஏற்பட்டது? எதற்காக ஏற்பட்டது? ஏன் ஏற்பட்டது? ... என்ற வினாக்களுக்கு விடை காண்பதிலேயே ஒரு மண்டல ஆண்டுகளுக்கு மேல் (48 ஆண்டுகள்) காலமும் கருத்தும் முயற்சியும் செலவாகி விட்டன. இருந்தும், இந்துவேதத்தையும், இந்துமதத்தையும் காப்பாற்றும் எண்ணம் பாலைவனத்தில் தோன்றும் கானல் நீர் போன்றே இருக்கின்றது..."

(2) "... இந்துவேதத்தையும், இந்துமதத்தையும் இன்றைய நிலையில் இவற்றை வழங்கிய ஆதிசிவனாரே நேரில் வந்தாலும் அடையாளம் கண்டுகொள்ள முடியாது! அடையாளம் கண்டுகொள்ள முடியாது!! அடையாளம் கண்டுகொள்ள முடியாது!!! இத்தகைய மிகப்பெரிய

நுட்பதிட்பம் நிறைந்த சிதைவும், சீரழிவும் இந்துவேதத்திற்கும், இந்துமதத்திற்கும் இயற்கையாக ஏற்பட்டிருக்க முடியாது! முடியாது!! முடியாது!!! முடியவே முடியாது! என்பது தெளிவாகத் தெரிகிறது. ஆனால், 'விழித்திருக்கும் போதே விழியைத் தோண்டுவது போல' என்ற பழமொழிக்கு விளக்கமாகவே தமிழ்மொழியும் வாழுகிறது; தமிழர்களும் வாழுகிறார்கள்! தமிழர்களின் கோயில்களும், தேர் திருவிழா திருநாள் ... கொண்டாட்டங்களோடு சிறப்பாக இருக்கின்றன. இப்படி, இவையெல்லாம் விழித்திருந்தும் இவற்றின் விழிகளான இந்துவேதமும், இந்துமதமும் சிதைத்துச் சீரழிக்கப் பட்டதென்பது விழித்திருக்கும் போதே விழியைத் தோண்டிய கதையாகத்தான் இருக்கிறது...."

(3) "... மிகத் தெளிவாகக் கோடிக்கணக்கான கடவுள்கள் வகைவகையாக பட்டியலிடப் பட்டுக் காட்டப்பட்டும் எப்படி ஒரே கடவுள்தான் உண்டு என்ற கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டது? கணக்கற்ற கோயில்களும் ஒவ்வொரு கோயிலிலும் கணக்கற்றக் கடவுள்களும், ஒவ்வொரு கடவுளுக்கும் தனித்தனியாகப் பூசைமொழிகளும், பூசைவிதிகளும், பூசைநெறிகளும் இருந்தும் எல்லாக் கடவுள்களுக்கும் ஒரே பூசைமொழி, பூசைவிதி, பூசைநெறி என்று எப்படி ஏற்பட்டன அல்லது ஏற்பட்டிட்டன அல்லது ஏற்படுத்தப்பட்டன அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்டன என்பதுதான் வியப்பாக, வேதனையாக இருக்கிறது..."

(4) "... குமரி முதல் இமயம் வரை உள்ள சிவன் கோயில்களின் மூலக் கருவறைக் கடவுள்களுக்கு அதாவது சிவன்களுக்குத் தனித்தனிப் பெயர்களும், அவர்களுடைய துணைவியார்களுக்கு அதாவது மனைவிகளுக்கு தனித்தனிப் பெயர்களும், இவர்களுடைய சிலைகளுக்கு தனித்தனி உருவ அமைப்புக்களும், அங்க வடிவ அமைப்புக்களும், முகத் தோற்றப் பொலிவுகளும், வாழ்க்கை வரலாறுகளும், சாதனைப்

பட்டியல்களும், போதனைக் கருத்துக்களும் ... இருந்தும் கூட இந்துமத இந்தியாவில் உள்ள எல்லாச் சிவன் கோயில்களிலும் இருக்கின்ற சிவனும், அவருடைய மனைவியும் ஒன்றுதான் என்ற கருத்து எப்படித் துணிந்து கூறப்பட்டது? ஏன் எல்லோராலும் பணிந்து ஏற்றுக் கொள்ளப்பட்டது?.

இதேபோல்தான், மால், திருமால், பெருமால், மாயோன், நெடியோன் ஐவரும் ஒன்றுக்கப் பட்டதும். ஒவ்வொரு கோயிலிலும் உள்ள மாலுக்கும், திருமாலுக்கும், பெருமாலுக்கும், மாயோனுக்கும், நெடியோனுக்கும் தனித்தனியான தோற்றப் பொலிவுகளும், அங்கங்களின் வடிவ அமைப்புக்களும், உருவத்தின் நிலைகளும், வாழ்க்கையின் சாதனைப் பட்டியல்களும், போதனைக் கருத்துக்களின் பட்டியல்களும் மிகத் தெளிவாக வெவ்வேருன தனித்தனித் தன்மைகளையும், பண்புகளையும் பெற்றிருந்தும் கூட; இந்த எல்லா மால்களையும், திருமால்களையும், பெருமால்களையும், மாயோன்களையும், நெடியோன்களையும் ஒன்றுக்கி இந்தியாவிலுள்ள எல்லாப் பெருமால் கோயில்களிலும் ஒரே பெருமால்தான் இருக்கிறுர்; இந்தப் பெருமாலுக்குத்தான் திருமால் என்றும், மால் என்றும், மாயோன் என்றும், நெடியோன் என்றும், திருவரங்கன் என்றும், வரதன் என்றும் பல பெயர்கள் சூட்டி விட்டார்கள் என்ற புதிய கருத்து எப்படி எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப் பட்டது? அல்லது எப்படி எல்லோரும் ஏற்றுக் கொள்ளும்படிச் செய்யப்பட்டது?

இம்மாபெரும் மோசமான மோசடியான கடவுட் குழப்பத்தை! கருத்துக் குழப்பத்தை! வரலாற்றுக் குழப்பத்தை! ஏற்படுத்தியவர்களின் வரலாறுகள் என்ன? எதிர்பார்ப்புக்கள் என்ன? என்பதையெல்லாம் எண்ணிப் பார்க்கும் போது தமிழுக்கும் வருங்காலமில்லை, தமிழருக்கும் வருங்காலமில்லை, இந்துவேதத்துக்கும் வருங்காலமில்லை, இந்துமதத்துக்கும்

வருங்காலமில்லை, இந்துக்களுக்கும் வருங்காலமில்லை, இந்தியாவிற்கும் வருங்காலமில்லை என்றுதான் கூற வேண்டும்...."

(5) "... ஒவ்வொரு கிராமத்துக்கும் காவல் தெய்வங்கள், தேவதைகள், தேவர்கள், கடவுள்கள்; அவர்களுடைய படையல்கள், விழா முறைகள், இசைக் கருவிகளின் வகைகள், திருவிழா நாட்கள், பூசாறிப் பரம்பரைகள், அருளாளர்கள், அருளாளிகள், அருளாடு நாயகங்கள், மருளாளர்கள், மருளாளிகள், மருளாடு நாயகங்கள், உலா வரும் வீதிகள், ஊர் எல்லைகள், ... முதலியவைகள் அனைத்தும் மிகமிகத் தெளிவாக விளக்கியுரைக்கப்பட்ட வரலாறுகள் நடைமுறைகளாக உயிரோடு இருந்தும்; இவைகளையெல்லாம் உருக்குலைத்து செல்வாக்கிழக்கச் செய்து சிதைத்துச் சீரழித்துப் பதினெண்சித்தர்களுடைய மாபெரும் அருட்கொடையான இந்துவேதத்தின் செயல்வடிவங்களையும், இந்துமதத்தின் செயல்நிலைகளையும் சிதைத்துச் சீரழித்தது 'விழித்திருக்கும் போதே விழியைத் தோண்டிய' கதையாகத்தான் இருக்கிறது...."

(6) "... புத்தரும், மகாவீரரும், கபாலிகரும், பைரவரும், காலாமுகப் பைரவரும், சாத்தரும், ... எதிர்த்த அல்லது எதிர்த்துப் போரிட்ட பொய்யான, போலியான, பயனில்லாத கற்பனவாதங்கள் மிக்க அறியாமைகளும், புரியாமைகளும் மிகுந்த ஹிந்துமதம் எப்படி மெய்யான பயன்மிக்க அனைத்து வகைப்பட்ட சத்தி, சித்தி, முத்திகளைத் தரவல்ல இந்துமதத்தை வெல்ல முடிந்தது? இதற்குக் காரணம் தமிழர்களுடைய ஏமாளிப் போக்கா! கோமாளிப் போக்கா! அப்பாவிப் போக்கா! அறியாமைப் போக்கா! வெகுளிப் போக்கா! தான்தோன்றிப் போக்கா! வறட்டுத்தனமான வம்பு வீம்புப் போக்கா! ... என்பது புரியவில்லை, புரியவில்லை, புரியவில்லை.

அதாவது, தமிழர்கள் தங்களுடைய உயிர்போன்ற தமிழையும், விழிகள் போன்ற இந்துவேதத்தையும், இந்துமதத்தையும் பிறர் சிதைத்துச் சீரழிக்கும்படி விட்டு விட்டார்களே என்று எண்ணும் போது தமிழர்

என்ற ஓர் இனமே இல்லாமல் போய்விடும்!; தமிழ்மொழி என்ற ஒரு மொழியே இல்லாமல் போய்விடும்!; தமிழ்நாடு என்ற ஒரு நாடே இல்லாமல் போய்விடும்! ... என்றுதான் தொலைநோக்கோடு கூற வேண்டியிருக்கிறது, தொலைநோக்கோடு கூற வேண்டியிருக்கிறது, தொலைநோக்கோடு கூற வேண்டியிருக்கிறது.

(7) "... எப்படி யெல்லாமோ சிந்தித்துப் பார்க்கிறோம். நூற்றுக்கும் மேற்பட்ட அழகிய இனிய தமிழ்ச் சொற்களால் பொருள் விளக்கங்கள் தரப்படுகின்ற பொருளாழமிக்க தூய உயர்தனிச் செந்தமிழ்ச் சொல்லான இந்து என்ற சொல்லை குமரி முதல் இமயம் வரை உள்ள இந்துக்கள் எப்படி மறந்தார்கள்? அல்லது எவ்வாறு மறக்கடிக்கப் பட்டார்கள்? அல்லது ஏன் மறந்தார்கள்? என்ற வினவிற்கு விடை கிடைக்கவில்லை, விடை கிடைக்கவில்லை, விடை கிடைக்கவில்லை, விடை கிடைக்கவேயில்லை. இதேநேரத்தில் எவ்விதப் பொருளுமே இல்லாத 'ஹிந்து' என்ற ஓர் அந்நிய மொழிச் சொல்லை குமரி முதல் இமயம் வரையுள்ள இந்துக்கள் எப்படி ஏற்றுக் கொண்டார்கள்? அல்லது எவ்வாறு ஏற்றுக் கொள்ளும்படிச் செய்யப்பட்டார்கள்? அல்லது ஏன் ஏற்றுக் கொண்டார்கள்? என்ற வினவிற்கும் விடை கிடைக்கவில்லை, விடை கிடைக்கவில்லை, விடை கிடைக்கவில்லை, விடை கிடைக்கவேயில்லை...."

(8) "... இந்தக் கலியுகம் பிறந்து சுமார் 1500 ஆண்டுகளுக்குள் தோன்றிய எந்த ஏடுகளிலும் இந்த 'ஹிந்து' என்ற சொல் காணப்படவில்லை. இதேபோல், யாம் செயல்படத் துவங்குவதற்கு சுமார் 500 ஆண்டுகளுக்குள் எந்த ஏடுகளிலும் 'இந்து' என்ற சொல் அதிகமாக ஆட்சியில் இல்லை. அதாவது 'ஹிந்து' என்ற சொல் அதிகமாக ஆட்சியிலும், 'இந்து' என்ற சொல் சிலசில இடங்களில் ஆட்சியிலும் காணப்படும் நிலை வந்துவிட்டது. எனவே, இந்த 'ஹிந்து' என்ற அன்னிய மொழிச் சொல் வெகு விரிவாகவும்,

விரைவாகவும் செயல்பட்டே இந்த 'இந்து' என்ற அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ்ச் சொல்லை ஏட்டுலகிலிருந்தும், நாட்டு நடப்பிலிருந்தும் விரட்டி விரட்டி விலகி ஓடச் செய்து விட்டது, விரட்டி விரட்டி விலகி ஓடச் செய்துவிட்டது, விரட்டி விரட்டி விலகி ஓடச் செய்து விட்டது.

அதாவது, 'ஹிந்து' என்ற சொல்லுக்குரிய அந்நியர்கள் இந்த 'ஹிந்து' என்ற சொல்லையே ஒரு பெரிய படையாகக் கொண்டு ஏட்டுலகிலும், நாட்டு நடப்பிலும் மிகப் பெரிய போர்களைத் தொடர்ந்து நடத்தி; இப்போர்களில் பெற்ற வெற்றிகளின் மூலம் இந்த 'இந்து' என்ற சொல்லுக்குரிய தமிழர்களை விரட்டி விரட்டி துரத்தி துரத்தி அடி அடியென்று அடித்து அச்சமும், கூச்சமும், கோழைப்பண்பும், தன்மானமில்லாத அடிமை மனமும் உடையவர்களாக ஆக்கினர் என்பதே உண்மை.

இதனால்தான், தமிழர்கள் மீண்டும் இந்த 'இந்து' என்ற அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ்ச் சொல்லின் அழகையும், பொருளாழத்தையும், எளிமையையும், தெளிவையும், வலிமையையும், பொலிவையும், தன்மானம் காக்கக் கூடிய ஆற்றலையும், இன உரிமையுணர்வை ஊட்டும் வளத்தையும், மதத்தத்துவச் செழிப்பையும், ஆட்சியையும், மாட்சிமை பெறச் செய்யும் சூழ்ச்சித் திறனையும், தமிழின மொழி நாட்டு வரலாறுகளை விளக்கும் சத்தியினையும் உணர்ந்து மீண்டும் 'இந்து' என்ற சொல்லைத் தங்களுடைய ஏட்டுலகிலும், நாட்டு நடப்பிலும் மாட்சிமிக்க ஆட்சி பெறச் செய்யும் விழிச்சிமிகு எழிச்சி நிலையை உருவாக்கும் பணியினைத் துவக்கினோம் யாம்.

இதற்காகவே, 48 ஓலைகள் முதல் 108 ஓலைகள் வரையுள்ள **'குறிப்பேடுகள்'** எனும் பெயரில் நூற்றுக் கணக்கான நூல்களை இந்து மதத்துக்கும், ஹிந்து மதத்துக்கும் உள்ள வேற்றுமைகளை

விளக்கிக் காட்டுவதற்காக எழுதி ஒவ்வொரு குறிப்பேட்டையும், ஆயிரக்கணக்கில் நகலெடுக்கச் செய்து நாடு முழுதும் அனுப்பும் பணியினைத் துவக்கினோம் யாம்.

இருந்த போதிலும், எமது முயற்சிகள் சித்திரை மாதத்தில் கொதிக்கும் பாலை நிலத்து மணலில் பாலை ஊற்றிய கதையாக இந்துக்களிடத்தில், குறிப்பாக இந்துமதத்தின் மூலவர்களாகவும், காவலர்களாகவும், வாரிசுகளாகவும், கருவூலங்களாகவும், விதைப் பண்ணைகளாகவும், நாற்றங்கால்களாகவும் இருக்கின்ற நமது தமிழர்களிடம் எவ்விதமான பயனும் ஏற்படவில்லை, ஏற்படவில்லை, ஏற்படவில்லை, ஏற்படவேயில்லை. எனவேதான், அருளை அநுபவப் பொருளாக வழங்கவல்ல அனைத்து வகைப்பட்ட அருளாளர்களும், அருளாளிகளும், அருளாடு நாயகங்களும், மருளாளர்களும், மருளாளிகளும், மருளாடு நாயகங்களும் தமிழினத்தில் தோன்றித் தோன்றி அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் அருள்மழை பொழியட்டும், அருள்மழை பொழியட்டும், அருள்மழை பொழியட்டும் என்பதற்குரிய ஏற்பாடுகளை தமிழ் கூறும் நல்லுலகம் முழுவதும் விரிவாகச் செய்து செல்லுகிறோம் யாம்…”

(9) “… இந்த ‘இந்து’ என்ற சொல்லின் பொருளும், வரலாறும், வாழ்வியல்களும், பூசைமொழிகளும், பூசைவிதிகளும், தத்துவங்களும், செயல்சித்தாந்தங்களும், அருளுலகப் பொருளுலகச் செயல் வீரர்களும், போதனைகளும், சாதனைகளும்தான் தமிழனை விழிச்சியுற்று, எழிச்சி பெற்று உரிய பயிற்சிகளைச் செய்து பெரிய பெரிய முயற்சிகளை மேற்கொண்டு செழிச்சி நிறை ஆட்சிமீட்சி பெறச் செய்திடும், செழிச்சி நிறை ஆட்சிமீட்சி பெறச் செய்திடும், செழிச்சி நிறை ஆட்சிமீட்சி பெறச் செய்திடும் என்ற இந்த மாபெரும் பேருண்மையினைத் தமிழர்களுக்குப் புரியவைக்கும் முயற்சியில் ஈடுபடக் கூடிய மனிதர்கள் செய்யக்கூடிய எல்லா வகையான தவறுகளும்,

கடுமையான பாவங்களும் முழுமையாக மன்னிக்கப்பட்டு வீடுபேறு வழங்கப்படும், விருப்பமான பேரின்பங்கள் சித்தித்திடும் என்று பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாகிய யாம், அருளாணை வழங்குகிறோம். இந்த அருளாணை அண்டபேரண்டங்கள் முழுவதும் நீண்டு நின்று நிலவிடும்.

எனவேதான்,

- 'தமிழனைத் தமிழனாக்குவதே சிறந்த தவம்',
- 'தமிழனுக்குத் தமிழ்மொழிப் பற்றினை உண்டாக்குவதே சிறந்த தவம்',
- 'தமிழனுக்குத் தன்மான உணர்வினைத் தோற்றுவிப்பதே சிறந்த தவம்',
- 'தமிழனுக்குத் தன்னம்பிக்கையூட்டுவதே சிறந்த தவம்',
- 'தமிழனுக்குத் தன்மான இனமான உணர்வினை ஊக்குவிப்பதே சிறந்த தவம்',
- 'தமிழனுக்கு இனப்பற்றினை விளைவிப்பதே சிறந்த தவம்',
- 'தமிழனுக்கு இன ஒற்றுமையுணர்வை உண்டாக்குவதே சிறந்த தவம்',
- 'தமிழனுக்கு இன உரிமையுணர்வை ஊற்றெடுக்கும்படிச் செய்வதே சிறந்த தவம்',
- 'தமிழனுக்குத் தனது தமிழ்மொழியே விழி என்ற அறிவை வளர்ப்பதே சிறந்த தவம்',
- 'தமிழனுக்குத் தானே அருளுலகின் மூலவன், முதல்வன், வாரிசு என்ற பேருண்மையை விளங்கிக் கொள்ளச் செய்வதே சிறந்த தவம்',

- ‘தமிழனுக்குத் தமிழே கடவுள், தெய்வம், தேவதை, இறை, எல்லா என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்’,
- ‘தமிழனுக்குத் தமிழ்மொழியே அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழி என்ற பேருண்மையைப் புரியும்படிச் செய்வதே சிறந்த தவம்’,
- ‘தமிழனுக்குத் தமிழ்மொழிதான் அருளை அநுபவப் பொருளாக ஊற்றெடுக்கச் செய்யும் அமுதமொழி என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்’,
- ‘தமிழனுக்குத் தமிழ்மொழியே அண்டபேரண்டங்களை இம்மண்ணுலகப் பிண்டங்களோடு இணைக்கும் பேராற்றலுடைய அருள்மொழி என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்’,
- ‘தமிழனுக்குத் தமிழ்மொழியே அனைத்து வகைப்பட்ட கடவுள்களையும் நேரில் வரவழைக்கும் ஆற்றலுடைய அருளுலக ஆட்சிமொழி என்ற பேருண்மையைப் புரிய வைப்பதே சிறந்த தவம்’,
- ‘தமிழனுக்கு அனைத்து வகைப்பட்ட மனிதர்களையும் விருப்பம்போல் எந்தக் கடவுளாகவும் மாற்றித் தரும் வல்லமை தமிழ்மொழிக்கே உண்டு என்ற பேருண்மையைப் புரிய வைப்பதே சிறந்த தவம்’,
- ‘தமிழனுக்கு கடவுளை மனிதனாக வரவழைக்கும் அருளாற்றலுடைய ஒரேமொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்’,
- ‘தமிழனுக்கு மனிதனைக் கடவுளாக்கும் பூசைமொழியினையுடைய ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்’,

- ‘தமிழனுக்கு நாற்பத்தெட்டுவகைப் பட்ட கடவுள்களையுடைய ஒரே ஒரு மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்’,
- ‘தமிழனுக்கு நாற்பத்தெட்டு வகைப்பட்ட வழிபடு நிலையினர்களையுடைய ஒரே ஒருமொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்’,
- ‘தமிழனுக்கு கடவுளர்களின் விருப்பங்களுக்கேற்ற 48 வகைப்பட்ட கருவறைகளையும், 48 வகைப்பட்ட வெட்டவெளிக் கருவறைகளையும், 48 வகைப்பட்ட வழிபாட்டு நிலையக் கருவறைகளையும், 48 வகைப்பட்ட கோயில் மூலக் கருவறைகளையும் தோற்றுவிக்கின்ற அருட்பேராற்றலையுடைய ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்’,
- ‘தமிழனுக்கு அருவக் கடவுள்களையும், அருவுருவக் கடவுள்களையும், உருவ அருவக் கடவுள்களையும், உருவக் கடவுள்களையும் தோற்றுவிக்கின்ற அருட்பேராற்றலையுடைய ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்’,
- ‘தமிழனுக்கு திருக்கல் எனும் கடவுள்களையும், தருக்கல் எனும் கடவுள்களையும், கருக்கல் எனும் கடவுள்களையும், குருக்கல் எனும் கடவுள்களையும் உருவாக்குகின்ற அருட்பேராற்றலையுடைய ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்’,
- ‘தமிழனுக்கு நூற்றெட்டு வகைப்பட்ட திருப்பதி சக்கரங்களும், 243 வகைப்பட்ட சத்திபீடச் சக்கரங்களும், 1008 வகைப்பட்ட சீவாலயச் சக்கரங்களும் எழுதுவதற்குப் பயன்படுத்தப்படும் அருட்பேராற்றலையுடைய ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்’,

- ‘தமிழனுக்கு அருளாளர்கள், அருளாளிகள், அருளாடு நாயகங்கள், மருளாளர்கள், மருளாளிகள், மருளாடு நாயகங்கள் என்ற ஆறுவகைப்பட்ட திருவருட்செல்வர்களேயும் தோற்றுவிக்கின்ற அருட்பேராற்றலேயுடைய ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்’,
- ‘தமிழனுக்கு நான்மறைகள், நான்முறைகள், நானெறிகள், நான்வேதங்கள் எனும் அருட்செல்வங்கள் இருக்கின்ற ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்’,
- ‘தமிழனுக்கு நவ நாதங்கள், பதினெண் சித்தங்கள், 36 ஓதங்கள், 96 போதங்கள் எனும் திருவருட் செல்வங்கள் இருக்கக் கூடிய ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்’,
- ‘தமிழனுக்கு நான் சுருதிகள், நான் ஆரணங்கள், நான் ஆகமங்கள், நான் மீமாம்சைகள் எனும் திருவருட் செல்வங்கள் இருக்கின்ற ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்’,
- ‘தமிழனுக்கு நேமங்கள், இணே நேமங்கள், துணே நேமங்கள் எனும் திருவருட் செல்வங்கள் இருக்கின்ற ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்’,
- ‘தமிழனுக்கு நியமங்கள், இணே நியமங்கள், துணே நியமங்கள் எனும் திருவருட் செல்வங்கள் இருக்கின்ற ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்’,
- ‘தமிழனுக்கு நிடதங்கள், இணே நிடதங்கள், துணே நிடதங்கள் எனும் திருவருட் செல்வங்கள் இருக்கின்ற ஒரே ஓர் அருள்மொழி

தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்',

- 'தமிழனுக்கு நிட்டைகள், இணை நிட்டைகள், துணை நிட்டைகள் எனும் திருவருட் செல்வங்கள் இருக்கின்ற ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்',
- 'தமிழனுக்கு நீதிகள், இணை நீதிகள், துணை நீதிகள் எனும் திருவருட் செல்வங்கள் இருக்கின்ற ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்',
- 'தமிழனுக்கு அத்தரங்கள், அத்திரங்கள், அத்திறங்கள் எனும் திருவருட் செல்வங்கள் இருக்கின்ற ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்',
- 'தமிழனுக்கு சாத்தரங்கள், சாத்திரங்கள், சாத்திறங்கள் எனும் திருவருட் செல்வங்கள் இருக்கின்ற ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்',
- 'தமிழனுக்கு சூத்தரங்கள், சூத்திரங்கள், சூத்திறங்கள் எனும் திருவருட் செல்வங்கள் இருக்கின்ற ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்',
- 'தமிழனுக்கு தோத்தரங்கள், தோத்திரங்கள், தோத்திறங்கள் எனும் திருவருட் செல்வங்கள் இருக்கின்ற ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்',

- ‘தமிழனுக்கு நேத்தரங்கள், நேத்திரங்கள், நேத்திறங்கள் எனும் திருவருட் செல்வங்கள் இருக்கின்ற ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதுதான் சிறந்த தவம்’,
- ‘தமிழனுக்கு வேத்தரங்கள், வேத்திரங்கள், வேத்திறங்கள் எனும் திருவருட் செல்வங்கள் இருக்கின்ற ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்’,
- ‘தமிழனுக்கு கருவாக்குகள், கருவாக்கியங்கள், கருவாசகங்கள் எனும் திருவருட் செல்வங்கள் இருக்கின்ற ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்’,
- ‘தமிழனுக்கு குருவாக்குகள், குருவாக்கியங்கள், குருவாசகங்கள் எனும் திருவருட் செல்வங்கள் இருக்கின்ற ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்’,
- ‘தமிழனுக்கு தருவாக்குகள், தருவாக்கியங்கள், தருவாசகங்கள் எனும் திருவருட் செல்வங்கள் இருக்கின்ற ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்’,
- ‘தமிழனுக்கு திருவாக்குகள், திருவாக்கியங்கள், திருவாசகங்கள் எனும் திருவருட் செல்வங்கள் இருக்கின்ற ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்’,
- ‘தமிழனுக்கு அருள்வாக்குகள், அருள்வாக்கியங்கள், அருள்வாசகங்கள் எனும் திருவருட் செல்வங்கள் இருக்கின்ற

ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்’,

- ‘தமிழனுக்கு மருள்வாக்குகள், மருள்வாக்கியங்கள், மருள்வாசகங்கள் எனும் திருவருட் செல்வங்கள் இருக்கின்ற ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்’,
- ‘தமிழனுக்கு ஆதகர், ஈதகர், ஏதகர், ஓதகர் எனும் அருட்கலைஞர்களை உருவாக்குகின்ற அருட்பேராற்றலையுடைய ஒரே ஒரு மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்’,
- ‘தமிழனுக்கு கோதகர், சாதகர், போதகர், வாதகர் எனும் அருளுலக ஊழியக் காரர்களை உருவாக்குகின்ற அருட்பேராற்றலையுடைய ஒரே ஒரு மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்’,

... முதலிய குருவாசகங்களை கணக்கற்று எல்லாக் குறிப்பேடுகளிலும் குருபாரம்பரியத்திலும் எழுதிச் செல்லுகிறோம் யாம்.

இவற்றின் மூலமாவது கணக்கற்றோரின் முயற்சியால் என்றாவது ஒருநாள் தமிழன் தமிழனுக்கப் படுவான். அப்படி, தமிழன் தமிழனுக்கப் பட்ட பிறகுதான் இந்துவேதம் வளவளர்ச்சியையும், ஆட்சிமீட்சியையும் பெற்றிடும். அதையொட்டியே, இந்துமதம் மறுமலர்ச்சி பெற்றிடும், ஆட்சிமீட்சி பெற்றிடும். எனவே குமரி முதல் இமயம் வரையுள்ள இந்துக்களில் பல்வேறு மொழியினர்களும், பல்வேறு இனத்தவர்களும் இருந்தபோதிலும் எல்லா இந்துக்களும் புரிந்து கொள்ளக் கூடிய சில குருவாக்கியங்களை இங்கு குறிப்பிடுகிறோம்.

## குருவாக்கியங்கள்

1. தமிழனின் தாழ்ச்சி நிலைகள் போக்கப்பட்டால்தான் இந்துமதத்தின் தாழ்ச்சி நிலைகள் போக்கப்பட்டிடும்.
2. தமிழனின் வீழ்ச்சி நிலைகள் அகற்றப்பட்டிட்டால்தான் இந்துமதத்தின் வீழ்ச்சி நிலைகள் அகற்றப்பட்டிடும்.
3. தமிழனின் இகழ்ச்சி நிலைகள் நீக்கப்பட்டிட்டால்தான் இந்துமதத்தின் இகழ்ச்சி நிலைகள் நீக்கப்பட்டிடும்.
4. தமிழனின் அடிமை நிலைகளும், மிடிமை நிலைகளும், அழிக்கப்பட்டிட்டால்தான் இந்து மதத்தின் அடிமை நிலைகளும், மிடிமை நிலைகளும் அழிக்கப்பட்டிடும்.
5. தமிழனுடைய தாழ்வு மனப்பான்மை ஒழிக்கப்பட்டிட்டால்தான் இந்துமதத்தின் தாழ்வு நிலைகள் ஒழிக்கப்பட்டிடும்.
6. தமிழன் உரிமை பெற்றிட்டால்தான் இந்துமதம் உரிமை பெறும்.
7. தமிழன் பெருமை பெற்றிட்டால்தான் இந்துமதம் பெருமை பெறும்.
8. தமிழன் வளம் பெற்றிட்டால்தான் இந்துமதம் வளம் பெறும்.
9. தமிழன் வலிமை பெற்றிட்டால்தான் இந்துமதம் வலிமை பெறும்.
10. தமிழன் பொலிவு பெற்றிட்டால்தான் இந்துமதம் பொலிவு பெறும்.
11. தமிழன் ஆட்சி பெற்றிட்டால்தான் இந்துமதம் ஆட்சி பெறும்.
12. தமிழன் மாட்சி பெற்றிட்டால்தான் இந்துமதம் மாட்சி பெறும்.
13. தமிழனின் விழிச்சியே இந்துமத விழிச்சி.
14. தமிழனின் எழிச்சியே இந்துமத எழிச்சி.
15. தமிழனின் முயற்சியே இந்துமத முயற்சி.
16. தமிழனின் உயர்ச்சியே இந்துமத உயர்ச்சி.
17. தமிழனின் மலர்ச்சியே இந்துமத மலர்ச்சி.
18. தமிழனின் வளவளர்ச்சியே இந்துமத வளவளர்ச்சி.
19. தமிழனின் ஆட்சியே இந்துமத ஆட்சி.

20. தமிழனின் மாட்சியே இந்துமத மாட்சி.
21. தமிழ்மொழியின் எழுத்துக்களே இந்துவேதத்தின் உயிரோட்டங்கள்.
22. தமிழ்மொழியின் எழுத்து வகைகளே இந்துவேதக் கடவுள்களின் வகைகள்.
23. தமிழ்மொழியின் சொற்களே இந்துவேதத்தின் பூசைமொழிகள்.
24. தமிழ்மொழியின் சொற்றொடர்களே இந்துவேத விளக்கங்கள்.
25. தமிழில் பேசுவதே இந்துவேதத்தை ஓதுவதாகும்.
26. தமிழின் வள வாழ்வே இந்துவேதத்தின் வளவாழ்வு.
27. தமிழின் உரிமை வாழ்வே இந்துவேதத்தின் உரிமை வாழ்வு.
28. தமிழின் விழிச்சியே இந்துவேதத்தின் விழிச்சி.
29. தமிழின் எழிச்சியே இந்துவேதத்தின் எழிச்சி.
30. தமிழின் வளர்ச்சியே இந்துவேதத்தின் வளர்ச்சி.
31. தமிழின் மறுமலர்ச்சியே இந்துவேதத்தின் மறுமலர்ச்சி.
32. தமிழின் உயர்ச்சியே இந்துவேதத்தின் உயர்ச்சி.
33. தமிழின் பயிற்சியே இந்துவேதத்தின் பயிற்சி.
34. தமிழின் செழிச்சியே இந்துவேதத்தின் செழிச்சி.
35. தமிழின் ஆட்சியே இந்துவேதத்தின் ஆட்சி.
36. தமிழின் வாழ்வே இந்துவேத வாழ்வு.
37. தமிழின் வரலாறே இந்துவேத வரலாறு.
38. தமிழ்மொழிச் செல்வங்களே இந்துவேதச் செல்வங்கள்.
39. தமிழே இந்துவேத வழி.
40. தமிழே இந்துவேத வழிகாட்டி.
41. தமிழே இந்துவேத வழித்துணே.
42. தமிழே இந்துவேத வழிப்பயன்.

... ... முதலிய குருவாக்கியங்களாவது தமிழ்மொழிக்கும் இந்துவேதத்துக்கும் உள்ள இணைப்பையும், பிணைப்பையும் தமிழர்களுக்காவது உணர்த்தட்டும், உணர்த்தட்டும், உணர்த்தட்டும் என்ற அறிவிப்பை வழங்கியே

இந்துமதம் எப்படியாவது என்றைக்காவது ஹிந்து மதத்தின் பிடியிலிருந்து விடுவிக்கப்படுவதற்குரிய பணிகளைத் தொடருகிறோம் இந்துமதத் தந்தையாகிய யாம்!!!...”

இப்படிப் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதியின் எழுத்துக் குவியல்களிலிருந்து சிலவற்றை எடுத்து எழுதி இந்த “இந்துவேதம், இந்துமதம் பிழைக்க, தழைக்க, உழைக்க, அழைக்கிறோம் வாரீர்! வாரீர்!! வாரீர்!!! என்ற தலைப்பில் எழுதப்படும் கட்டுரை நூலின் இரண்டாம் பகுதியை நிறைவு செய்கிறோம், **இந்துவேதத்தை இம்மண்ணுலகுக்கு வழங்கிய பதினெண்சித்தர் மடத்தின் மடாதிபதி, இந்துமதத்தை இம்மண்ணுலகுக்கு வழங்கிய பதினெண்சித்தர் பீடத்தின் பீடாதிபதி, இந்துமதத்தின் முழுமுதற் தலைமை ஆச்சாரியக் குருபீடமான ஞாலகுருச்சாரியார், இந்துமதத் தந்தை, இந்துவேத நாயகம், இந்துவேதபீடம்.**

**18/12/91இல் தொடங்கி 19/12/91இல் நிறைவு பெற்றது.**

**//உண்மை நகல்//**

**//மூல நகல்: சித்தரடியான் திரு சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

***[இந்தக் கட்டுரை இந்த இதழுடன் நிறைவு பெறுகிறது.]***

ஓம் குருவே துணை!

[குருதேவர் அருளியவை]

தலைமைப்பீடம்,
25-1-1993.

எழுதியவர்: குருமார் வெங்கடேசன்.

# தமிழாசிரியர்களின் நிலை

1) இன்றைக்குத் தமிழாசிரியர்களாக இருப்பவர்கள் எல்லோருமே ஏறத்தாழ எதிர்பாராமல் தமிழ் படித்தவர்கள். அதாவது வயிற்றுப் பிழைப்பிற்காக படிப்பதற்கு டாக்டர், இன்சினீயர், B.Com., கணிணி, Maths, Science, History என்று எதிலுமே இடம் கிடைக்காதவர்கள்; வேறு வழியின்றி தமிழ் படித்துவிட்டு தமிழாசிரியராக வேலை பார்த்து பணம் சம்பாதித்து குடும்பத்தை நடத்தலாம் என்பதற்காகத் தமிழ் படித்தவர்களேயாவார்கள்.

எனவே, யாருக்கும் தமிழ் அறிவைப் பெற வேண்டும், தமிழில் புலமையை வளர்த்துக் கொள்ள வேண்டும், தமிழில் ஆராய்ச்சி செய்ய வேண்டும், தமிழ்மொழிக்குத் தொண்டாற்ற வேண்டும், தமிழிலுள்ள இலக்கியங்களை விரிந்தும், ஆழ்ந்தும் படித்து மக்களிடையில் இலக்கியத்தைப் பரப்ப வேண்டும் என்றோ அல்லது தமிழ் உணர்ச்சியை வளர்க்க வேண்டும் என்றோ அல்லது மாணவர்களுக்கிடையில் தமிழ்ப் பற்றை வளர்க்க வேண்டும் என்றோ அல்லது தமிழ் மொழியறிவு உடையவன்தான் தமிழனாக வாழ வேண்டும் என்றோ அல்லது தமிழ் மொழியறிவுதான் தமிழர்களை ஒன்றுதிரட்டும் என்றோ! ஒற்றுமைப்படுத்தும் என்றோ! ஒருமைப்படுத்தும் என்றோ! தன்னம்பிக்கை

பெறச் செய்யும் என்றோ! இன உணர்வை உண்டாக்கும் என்றோ! நாட்டுப் பிடிப்புணர்வையும், பற்றுணர்வையும் உண்டாக்குமென்றோ மக்களிடையில் கருத்தைப் பரப்பத் தயாராக இல்லை.

இன்னும் சொல்லப் போனால் 25 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த தமிழாசிரியர்கள்; மாணவர்களோடு நெருங்கிய தொடர்பை வளர்த்துக் கொண்டு, தங்களுக்கென்று மாணவர்களுக்கிடையில் தனிப்பட்ட செல்வாக்கை விருப்பத்தோடு வளர்த்துக் கொண்டிருந்தார்கள். அதற்காக மாணவர்களுடைய குடும்ப நிகழ்ச்சிகள், வாழ்க்கைப் பிறச்சினைகள், ஊர்ப் பிறச்சினைகள், ஊர்த் திருவிழாக்கள், திருமண விழாக்கள், கோயில் விழாக்கள், இலக்கிய மன்றங்கள், தேவார திருவாசக திருச்சபைகள், பாரதியார் பாரதிதாசன் படிப்பகங்கள், அருணகிரியார் இராமலிங்க அடிகளார் தாயுமானவர் பட்டினத்தடிகள் இவர்கள் பெயரில் தத்துவ சபைகள், வாரவழிபாட்டு சபைகள், ஊர்ப் பொதுவில் இலக்கியப் பட்டிமன்றங்கள் முதலியவைகளை நிகழ்த்தி வந்தார்கள். அவைகளில் பங்கு பெற்றிருந்தார்கள். ஆனால், இன்றைய தமிழாசிரியர்கள் தாங்கள் வேலை பார்க்கின்ற பள்ளிக் கூடங்களில் கூட இலக்கிய விழாக்கள் நடத்த தயங்குகிறார்கள். பட்டிமன்றங்கள் நடத்த பயப்படுகிறார்கள். தமிழ்மொழி என்று கூறி தங்களைத் தமிழ்மொழி ஆசிரியர்கள் என்று வெளிப்படுத்திக் கொள்ள பயப்படுகிறார்கள்.

மேலே கூறிய காரணங்களால் இன்று வாழுகிற தமிழாசிரியர்கள் வெளிப்படையாகவே வாய்விட்டு:-

"நாங்கள் வயிற்றுப் பிழைப்பிற்காக தமிழ் வாத்தியாராக வேலை பார்க்கிறோம். கணிதம், விஞ்ஞானம், வரலாறு முதலியவற்றைக் கற்றுக் கொடுக்கின்ற ஆசிரியர்கள் போன்றவர்கள்தான் நாங்கள். அந்த ஆசிரியர்களைப் போல எப்படிக் கணித ஆசிரியரோ,

வரலாற்று ஆசிரியரோ, விஞ்ஞான ஆசிரியரோ தான் கற்றுக் கொடுக்கின்ற பாடத்திற்காகக் கூட தன்னே ஈடுபடுத்திக் கொள்ள முடியாதோ அப்படித்தான் நாங்களும். நாங்கள் மட்டும் நாங்கள் கற்றுத் தருகின்ற தமிழுக்காக வாழ வேண்டும் என்று ஏன் எதிர்பார்க்கிறீர்கள்? தமிழுக்கும் எங்களுக்கும் அதிகத் தொடர்பு கிடையாது.

நாங்கள் மற்ற ஆசிரியர்கள் தங்களுடைய பாடத்தை மாணவர்கள் தேர்வில் தேர்ச்சி பெறுவதற்காக, பயிற்சி பெறுவதற்காக, அதிக மதிப்பெண்கள் பெறுவதற்காக எப்படிச் சொல்லிக் கொடுக்கிருர்களோ அப்படித்தான் சொல்லிக் கொடுக்க முடியும். அதாவது பாடத்தை நடத்தி, கடினச் சொற்களுக்கு பொருள் கூறி, தேர்வில் என்னென்ன கேள்விகள் வரலாம் என்று கூறி அவற்றிற்கு விடை கூறி முடிந்தால் எழுதிப் போட்டு மாணவர்களுக்கு உதவி செய்கிறேம். அவ்வளவுதான்.

எங்களிடம் தமிழ்வெறி கிடையாது. தமிழ்மொழி மட்டும்தான் உயர்ந்த மொழி என்று சொல்லுவதற்கு ஆதாரம் எதுவுமில்லே. தமிழ்மொழியைத் தவிர வேறு எந்த மொழியைப் படித்தாலும் வாழ்க்கைப் பிரயோசனமுண்டு, பயனுண்டு, பொருள் சம்பாதிக்க வழியுண்டு. தமிழை ஒரு பாடமாக வைத்து புலவர், B.A., B.O.L., M.A., M.O.L., M.Litt., Ph.D என்று படிப்பதெல்லாம் அர்த்தமற்றது. வெறும் கேலிக் கூத்து. தமிழ் படிப்பதற்கென்று எதுவுமே இல்லே.

இன்னும் சொல்லப் போனல் தமிழ் இலக்கியங்களில் இன்றைக்கு உலகியலாக காதலிப்பது; பணத்திற்காகவும், பதவிக்காகவும் சண்டை போட்டுக் கொள்வது; காளி, மாரியை சாமி கும்பிடுவது என்ற மூன்று செய்தியைத் தவிர வேறு செய்தியே இல்லே. இதில்

தமிழ் படித்து என்ன ஆகப் போகிறது? இங்கிலீஷ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி மொழிகளைப் படித்து எவ்வளவோ செய்திகளைத் தெரிந்து கொள்ளலாம். இயற்கை, இலக்கியம், தத்துவம், விஞ்ஞானம், வரலாறு தெரிஞ்சுக்கலாம். எனவே, தமிழ் படிப்பது தேவையற்ற ஒன்று. நாம்தான் மொழி வெறி பிடித்து அலைகிறோம். தமிழனுக்கு மொழிவெறி இருப்பதினால்தான், எந்த நாட்டிற்குச் சென்றாலும் உதை வாங்குகிறான். தமிழன் மற்றவர்களோடு கலந்து வாழாமல் இருப்பதற்குக் காரணமே தமிழ்மொழிதான். தமிழன், தமிழ் வெறி, பற்று இவற்றை விட்டால்தான் உருப்படுவான்"

- என்று நேரடியாக வெளிப்படையாகப் பேசுகிற தமிழாசிரியர்களே இன்றைக்கு இருக்கிறார்கள்.

## இன்றைய மாணவர்கள்.
## "மாணவர்களும் தமிழும்"

(அ) இன்றைய மாணவர்கள் காணுகின்ற கல்லூரிச் சூழ்நிலை, அல்லது பள்ளிச் சூழ்நிலை முழுக்க முழுக்க மேல்நாட்டுப் பாணியில்தான் இருக்கிறது. கல்வி நிறுவனத்தின் தலைவர் முதல் கல்வி நிறுவனத்தின் காவல்காரன் (watchman), சேவகன் (Peon), தோட்டி (Scavenger), உதவியாளர் (attender), எழுத்தர் (clerk), மேலாளர் (Superintendent), ஆசிரியர்கள் (Teachers), விரிவுரையாளர்கள் (demonstrators, Lecturers, Principals, Head-masters) எல்லோருமே ஆங்கில உடைதான் அணிந்திருக்கிறார்கள். இதைப் பார்க்கும் போதே அவனுக்கு தமிழ்ப் பண்பாட்டுக்குரிய வேட்டி

கட்டியவர்களெல்லாம் படிக்காதவன், பண்பாடற்றவன், பட்டிக்காட்டான், முட்டாள், ஏமாளி, கோமாளி, அப்பாவி என்ற கருத்துதான் வன்மையாக இருக்கிறது, வளமாக இருக்கிறது, வலிமைப்பட்டிருக்கிறது. இந்த அடியே தமிழ்ப் பண்பாட்டை, நாகரிகத்தை உடைத்துத் தூள்தூளாக்கி விடுகிறது.

(ஆ) மாணவர்கள் கல்வி நிலையத்திற்குச் சென்ற உடனே Sir (சார்), Teacher (டீச்சர்), Student, School, College, Book, Pen, Pencil, Building, Compound, Madam, Yes, No, Excuse Me, Thanks, Brother, .. .. இது மாதிரியான ஆங்கிலச் சொற்களோடுதான் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இவற்றைத்தான் உயிர்நாடியாகக் கொண்டிருக்கின்றார்கள். தமிழில் ஐயா, அண்ணன், அக்கா, தங்கை, புத்தகம், எழுதுகோல், நாற்காலி, அலுவலகம், எழுத்து, விளையாட்டு, நண்பர், தோழர், ...... முதலிய சொற்களை சொன்னாலே கேவலம் என்று நினைக்கின்றான் மாணவன். எனவே, தமிழ் வழியாக (மீடியம்) பாடங்களைக் கற்பது மரியாதை குறைவு என நினைக்கிறான். தமிழ்வழி படித்தால் மரியாதை குறைவு, அதிக அறிவு வராது என நினைக்கிறான். இந்த நினைவுடன் இருக்கும் மாணவனை தமிழாசிரியர்கள் கவர முடியாது, தமிழை அதிகம் படிக்க வைக்க முடியாது.

(இ) தேர்வுக் கண்ணோட்டத்தில் தமிழ் வகுப்பை ஒரு வகுப்பாகவே நினைப்பதில்லை மாணவர்கள். அதற்குக் காரணம் தமிழில் இருக்கும் செய்யுள், உரைநடை, துணைப்பாடம் முதலிய எதுவுமே புதுமைக் கண்ணோட்டத்தில் இல்லை. ஆராய்ச்சிப் போக்கில் இல்லை. தேர்வுத் தாளில் கேட்கப்படும் கேள்விகளும் மிக எளிதாக பாடப் புத்தகத்தையே படிக்காதவன் எழுதத் தக்கனவாகவே இருக்கின்றன.

(ஈ) மாணவர்களுக்குப் பாடம் கற்றுத் தருகின்ற தமிழாசிரியர்கள் இலக்கியங்களை முழுமையாகக் கற்றவர்களில்லை. அதாவது, அக நானூறு,

புற நானூறு, ஐங்குறுநூறு, குறுந் தொகை, கலித் தொகை .... என்ற நூற்றுக்கணக்கான புலவர்களின் தனிப்பாடல்கள் ஒவ்வொரு தொகை நூல்களிலும் இருக்கின்றன. இந்தப் புலவர்களின் பாடல்களை முழுமையாகப் படித்தே ஆக வேண்டும் என்ற கட்டாயம் தமிழ் B.A., M.A. புலவர்களுக்கு இல்லை. அந்தக் கட்டாயம் இருந்து தமிழாசிரியர்கள் தொகை நூல்களையெல்லாம் முழுமையாகக் கற்றவர்களாக இருப்பார்களேயானால், தங்களை அறியாமல் தமிழ்மொழி வெறியர்களாக, தமிழ்மொழிப் பிரியர்களாக, தமிழ் உணர்வுள்ள மேதைகளாக, தமிழ் அறிஞர்களாக, தமிழிலே பேராற்றல் மிக்க எழுத்தாளர்களாக, பேச்சாளர்களாக, புதியபுதிய கோணங்களில் கட்டுரைகளை எழுதும் ஆராய்ச்சியாளர்களாக மாணவர்களுக்கு தமிழ்ப் பற்றும், பாசமும், ஈடுபாடும், அக்கரையும், ஆர்வமும், விருப்பமும் ஏற்படுகின்ற அளவுக்கு பாடம் நடத்தியே தீருவார்கள். ஏனோதானோ என்று பாடம் நடத்த மாட்டார்கள். அதாவது தமிழ் ஆசிரியர்களுக்கு தமிழ் இலக்கியங்களில் விரிந்து பரந்துபட்ட ஆழமான புலமை இல்லாத காரணத்தினால்தான் அறிவும், ஆராய்ச்சி ஆர்வமும் இல்லாத காரணத்தால்தான் தமிழாசிரியர்களால் மாணவர்களுக்கு தமிழில் ஈடுபாடு ஏற்படுமாறு செய்ய முடியவில்லை.

**//உண்மை நகல்//**

**//இதன் மூல நகல்: வேம்பைச் சித்தரடியான் குருமார் திரு வெங்கடேசன் அவர்களின் கையெழுத்திலேயே இருந்தது.//**

# நாட்டில் புதுமை வர வேண்டும்

"... அரசியல் 'கட்சியாக' இங்கே இருக்கிறது. ஒரு கட்சிக்காரன் இன்னொரு கட்சிக்காரனிடம் ஒருத்தனை ஒருத்தன் பகைமை பாராட்டி, யார் யாரை அழிக்கிறது? அல்லது யார் செழிக்கிறது? என்று இருக்கிறார்கள். அதனாலே இன்று அரசியல் மேலே மக்களுக்கும் நம்பிக்கை இருப்பதில்லை. யாராக இருந்தாலும் கவலையே இல்லை என்கின்ற கட்டத்துக்கு வந்துவிட்டார்கள். இது வரைக்கும் நமது நாட்டிலே 34 வருடம் ஆகி அரசியல் கட்சிதான் மாறி உள்ளதே தவிர, அரசு மாறவில்லை. அரசு மாற வேண்டுமென்றால், அந்த ஆட்சி இயந்திரமே மாற வேண்டும். அதே ஆபீசர்கள், அதே அலுவலகங்கள், அதே கட்சி.

ஒரு கட்சி செயித்து விட்டது என்றால், தோற்ற கட்சிகளில் இருந்தவன் எல்லாம் செயித்த கட்சிக்கு வந்து விடுகிறான். கட்சியை மாற்றிக் கொண்டு வந்து விடுகிறான். இவனும் தனக்கு ஆட்கள் வேண்டும் என்று சேர்த்துக் கொள்ளுகிறான். பழைய ஊழல்கள், பழைய குறைகள், பழைய அநீதிகள், பழைய கொடுமைகள், பழைய அறியாமைகள், தெரியாமைகள்,... எல்லாம் இருந்து கொண்டே இருக்கிறது. இந்த நாட்டிலே எதுவும் புதிதாகச் செய்வதில்லை. எந்தக் கட்சி வந்தாலும் அதுதான் நடக்கிறது. ..."

**//22-06-1984இல் குருதேவர் அருளிய உரையிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு பகுதி.//**








11வது பதினெண்சித்தர் பீடாதிபதி

12வது பதினெண்சித்தர் பீடாதிபதி

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூறார் அவர்களின் (கி.பி.785 - 1040) பாரம்பரியத்தில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிப் போய்க் கொண்டிருக்கும் கோப்புக்களிலிருந்து வழங்கப்படுகின்றன.

"... குருவாசகங்களை கணக்கற்று எல்லாக் குறிப்பேடுகளிலும் குருபாரம்பரியத்திலும் எழுதிச் செல்லுகிறோம் யாம். இவற்றின் மூலமாவது கணக்கற்றோரின் முயற்சியால் என்றாவது ஒருநாள் தமிழன் தமிழனாக்கப் படுவான். அப்படி, தமிழன் தமிழனாக்கப் பட்ட பிறகுதான் இந்துவேதம் வளவளர்ச்சியையும், ஆட்சிமீட்சியையும் பெற்றிடும். அதையொட்டியே, இந்துமதம் மறுமலர்ச்சி பெற்றிடும், ஆட்சிமீட்சி பெற்றிடும். குமரி முதல் இமயம் வரையுள்ள இந்துக்களில் பல்வேறு மொழியினர்களும், பல்வேறு இனத்தவர்களும் இருந்தபோதிலும் எல்லா இந்துக்களும் புரிந்து கொள்ளக் கூடிய சில குருவாக்கியங்களை இங்கு குறிப்பிடுகிறோம்....."

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai. Printed by Mr Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell: 09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org
https://books.gurudevar.org
https://gurudevar.in
https://gurudevar.org
https://induism.org
Email: indhuism@gmail.com

காணிக்கை : ரூ10/-